DEPOSITION OF WITNESS

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.I, PANRUTI.

STC.No.343/2025

Deposition of Witness:LW8/PW7

| | | | |
|---|---|---|---|
| Name | திரு. எழில்தாசன், காவல் ஆய்வாளர் | Taluk | |
| Father's Name | பக்கிரி | Village | |
| Age | 39 | calling | |
| Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of day of **26.05.2026.** | | | |

(Accused present)

**<u>அரசு தரப்பில் முதல் விசாரணை:</u>**

**1.** நான் தற்போது திருப்பத்தூர் மாவட்டம், ஆம்பூர் கிராமிய காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணி புரிந்து வருகிறேன். நான் பண்ருட்டி காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்தபோது, இவ்வழக்கில் சிறப்பு உதவி ஆய்வாளர் புஷ்பராஜ் கடந்த 03.06.2024 அன்று, மாயவன் மகன் சங்கர் என்பவர் நிலையம் ஆஜராகி அளித்த புகார் மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, வழக்கு கோப்பினை புலன் விசாரணைக்காக எனது பார்வைக்கு வைத்ததை நான் பார்வையிட்டு, எனது புலன் விசாரணைக்கு எடுத்துக்கொண்டு, கடந்த 04.06.2024 அன்று காலை சுமார் 8.30 மணியளவில் சம்பவயிடம் சென்று, சாட்சிகள் பிரகாஷ், முரளி ஆகியோர்கள் முன்பு சம்பவயிடத்தை பார்வையிட்டு, மாதிரி வரைபடம் வரைந்து, பார்வை மகசர் தயார் செய்து, பார்வை மகசரில் மேற்சொன்ன சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்று, அவர்களை விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மேற்படி மாதிரி வரைபடம் அ.சா.ஆ-5 ஆக குறியீடு <u>செய்யப்படுகிறது</u>).** மேலும், இவ்வழக்கின் புகார்தாரரும், காயம்பட்ட நபருமான சங்கர் என்பவரையும், கண்ணுற்ற சாட்சிகள் சரண்ராஜ், செல்வம் ஆகியோர்களையும், கடந்த 04.06.2024 அன்று விசாரணை செய்து, தனித்தனியே வாக்குமூலம் பதிவு செய்தேன்.

2. மேற்படி சாட்சிகளின் விசாரணையிலிருந்து வழக்கு சம்பவம் உண்மையென தெரியவந்ததில், வழக்கில் சம்பந்தப்பட்ட எதிரியான ஸ்ரீதர் என்பவரை தேடியதில், எதிரி மேன்மைமிகு கடலூர் மாவட்ட முதன்மை அமர்வு நீதிமன்றத்தில் Crl.M.P.No.4696/2024 நாள்.09.08.2024 அன்று முன்ஜாமின் பெற்றிருந்ததால் நான் அவரை கைது செய்யவில்லை.

3. வழக்கு சம்பவத்தில் காயம்பட்ட சங்கருக்கு சிகிச்சை அளித்த பண்ருட்டி அரசு மருத்துவமனை மருத்துவர் சகுந்தலா என்பவரை கடந்த 10.08.2024 அன்று விசாரணை செய்து, மேற்படி நபருக்கு ஏற்பட்ட காயம் சொற்பகாயம் என்று வழங்கிய காயச்சான்றை பெற்று, வாக்குமூலம் பதிவு செய்தேன். **(மேற்படி**

**விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்று குவிமுச பிரிவு 294(3) படி எதிரி தரப்பு ஆட்சேபணையின்றி அ.சா.ஆ–6 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** மேலும், மேற்சொன்ன சிறப்பு உதவி ஆய்வாளர் புஷ்பராஜை, நான் கடந்த 10.08.2024 அன்று விசாரணை செய்து, வாக்குமூலம் பதிவு செய்தேன்.

4. இத்துடன் நான் வழக்கின் புலன் விசாரணையை முடித்து எதிரி மீது இ.த.ச பிரிவுகள் 294(b), 323, 506(1)–ன்படி, கடந்த 10.08.2024 அன்று இறுதி அறிக்கை தயார் செய்து, சமூகம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். எனது விசாரணையில் அ.சா.2, அ.சா.4, அ.சா.5 ஆகியோர்கள் அவர்களது கு.வி.மு.ச பிரிவு 161(3) வாக்குமூலத்தில் சொல்லியுள்ளதுபோல் சொல்லியுள்ளார்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை:**

1. அ.சா–1க்கும், ஆஜர் எதிரிக்கும் கார் ஸ்டேண்ட் தேர்தல் விஷயமாக ஏற்கனவே முன்விரோதம் உள்ளது என்ற விவரத்தினை எனது விசாரணையில் தெரிந்துகொண்டேனா என்றால், தெரிந்துகொண்டேன். இந்த வழக்கில் கார் ஸ்டேண்டில் பணிபுரியும் ஓட்டுனர்கள் அல்லாத இதர பொதுமக்கள் யாரையும் சாட்சிகளாக சேர்க்கவில்லை என்றால், சரிதான், ஏனென்றால், மேற்படி சம்பவம் நடந்தது அதிகாலை நேரம் என்பதால், அங்கு பொதுமக்கள் யாரும் இல்லை. மேற்படி கார் ஸ்டேண்டில் பணிபுரியும் ஓட்டுனர்கள் மட்டும்தான் இருந்தனர், அவர்கள் மட்டும்தான் சம்பவத்தை நேரில் பார்த்தனர் என்பதால், அவர்களை மட்டும் சாட்சிகளாக சேர்த்துள்ளேன். மேற்படி சம்பவ இடம் திருமண மண்டபம், பெட்ரோல் பங்க், சைக்கிள் ஸ்டேண்ட் ஆகியவை இருப்பதனால், அங்கு பொதுமக்கள் நடமாட்டம் அதிகம் இருக்கும் என்றால் சரிதான். சம்பவ இடத்திலிருந்து, காவல் நிலையம் சுமார் 20 மீ தூரம்இருக்குமா என்றால், 50 மீ தூரம் இருக்கும். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடம் ஸ்டேட் ஹைவே ரோடு என்பதனால், அங்கு ஏதேனும் அசம்பாவிதம் ஏற்பட்டால், உடனே அங்கு போக்குவரத்து நெரிசல் ஏற்படும் என்றாலும், எனவே காவல் நிலையத்தார் உடனே சம்பவ இடத்திற்கு வந்துவிடுவார்கள் என்றாலும் சரிதான். இவ்வழக்கில் அவ்வாறு போலிசார் சம்பவ இடத்திற்கு, சம்பவம் நடந்த உடனேயே வரவில்லை என்றால், சரிதான், ஏனென்றால், மேற்படி சம்பவம் நடந்தது அதிகாலை நேரம் என்பதால், அங்கு பொதுமக்களோ, போக்குவரத்து நெரிசலோ ஏற்படாததனால், எவ்வித தகவலும் காவல் நிலையத்திற்கு வரவில்லை, அதனால் போலிசார் அந்த இடத்திற்கு வரவில்லை.

2. பொதுவாக, கார் ஸ்டேண்டுகளில் காலை 8.00 மணிக்குமேல் தான் ஓட்டுனர்கள் பணியை தொடங்க வருவார்கள் என்றால், அது அவர்களின் தொழிலை பொறுத்து, சிலர் அதிகாலை 4.00 மணிக்கும் வருவார்கள், 6 மணிக்கும் வருவார்கள், 8 மணிக்கும் வருவார்கள். இவ்வழக்கில், அ.சா–1 அவர் புகாரில் கூறியுள்ளதுபோல், 6.20 மணிக்கு கார் ஸ்டேண்டிற்கு வரவுமில்லை, அவர் கூறியதுபோல், சம்பவம் எதுவும் நடக்கவுமில்லை என்றால் சரியல்ல. இவ்வழக்கு சம்பவம் சம்மந்தமாக அ.சா–1 வீடியோ புட்டேஜ் ஏதேனும் என்னிடம் கொடுத்தாரா என்றால், கொடுக்கவில்லை, ஆனால் அவர் தனது அலைபேசியில் எடுக்கப்பட்ட வீடியோவை காட்டினார். அ.சா–1டம் இருந்து மேற்படி வீடியோ புட்டேஜை கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். உண்மையிலேயே அ.சா–1 கூறியவாறு இவ்வழக்கு சம்பவம் நடந்திருந்தால், அ.சா–1டம் இருந்து மேற்படி வீடியோ புட்டேஜை கைப்பற்றி இவ்வழக்கில் தாக்கல்

செய்திருப்பேன் என்றாலும், அவ்வாறு சம்பவம் உண்மையில்லை என்பதனால்தான் அதனை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றாலும் சரியல்ல. அ.சா–1ஐ கார் ஸ்டேண்டில் வைத்து, சம்பவம் நடந்த மறுநாளான 04.06.2024 அன்று, காலை சுமார் 9.30 மணியளவில், விசாரணை செய்தேன். என்னுடன் அப்போது நிலைய காவலர் ஒருவர் இருந்தார், அந்த சமயத்தில், சம்பவ இடத்தில் அ.சா–1 உடன் சம்பவ இட சாட்சிகளை தவிர வேறு யாரும் இல்லை.

3. அ.சா–1 அவரது முதல் விசாரணையில், தனது காரினை நிறுத்தி பின்பக்க வழியாக உள்ளே துடைத்துக்கொண்டிருந்தேன் என்று, கூறியுள்ள சங்கதிகளை எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை. அ.சா–1 அவரது முதல் விசாரணையில், தன்னை எதிரி கீழே கிடந்த மூங்கில் கழியை எடுத்து தாக்கியதாக கூறியுள்ள சங்கதிகளை எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் கூறியுள்ளார். மேற்படி மூங்கில் கழியை இவ்வழக்கில் கைப்பற்றியுள்ளேனா என்றால், சம்பவ இடம் சென்றபோது மேற்படி மூங்கில் கழி கிடைக்கவில்லை, அதனால் கைப்பற்றவில்லை. அ.சா–1 அவரது குறுக்கு விசாரணையில், மேற்படி மூங்கில் கழியானது அவர் தாக்கப்பட்ட வேகத்தில் உடைத்துக்கொண்டது என்று கூறியுள்ள சங்கதிகளை எனது விசாரணையில் கூறியுள்ளாரா என்றால் கூறவில்லை, தாக்கியதாக மட்டும் கூறியுள்ளார். நான் இவ்வழக்கில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்ட 03.06.2024 அன்று சிறப்பு உதவி ஆய்வாளர் புஷ்பராஜை விசாரணை செய்யாமல், எனது கீழ்நிலை அதிகாரியிடமிருந்து வழக்கு கோப்பினை விசாரணைக்காக எனது பார்வைக்கு எடுத்துக்கொண்டேன் என்றாலும், அதன் பிறகு 10.08.2024 அன்று தான் சிறப்பு உதவி ஆய்வாளர் புஷ்பராஜை விசாரணை செய்துள்ளேன் என்றாலும் சரிதான். மேற்படி சிறப்பு உதவி ஆய்வாளர் புஷ்பராஜை விசாரணை செய்வதற்கு முன்பே இவ்வழக்கின் இதர சாட்சிகளை விசாரணை செய்துவிட்டேன் என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக 19.00 மணியளவில்தான், தகவல் கிடைத்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான். இவ்வழக்கு சம்பவம் தொடர்பாக மருத்துவமனையிலிருந்து, கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில், முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யவில்லை என்றால் சரிதான், அ.சா–1 நேரடியாக நிலையத்திற்கு வந்து, கொடுத்த புகாரின்பேரில்தான் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

4. அ.சா.1 கொடுத்த தவறான புகாரை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, சரியாக புலன் விசாரணை செய்யாமல் இவ்வழக்கில் இறுதி அறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. இவ்வழக்கின் அனைத்து ஆவணங்களும் காவல் நிலையத்தில் வைத்து தயார் செய்யப்பட்டன என்று சொன்னால் சரியல்ல. புகார்தாரர் கொடுத்த பொய்யான புகார் மனுவை பெற்று, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, அதனைத்தொடர்ந்து, தவறான இறுதியறிக்கை தாக்கல் செய்து, அதற்கு ஆதரவாக தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆஜர் எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**நீதிமன்ற அனுமதியின் பேரில் அரசு தரப்பில் மறுவிசாரணை**

அ.சா–1 என்னிடம் அவரது அலைபேசியில் காட்டிய வீடியோ புட்டேஜை கைப்பற்றி இந்நீதிமன்றத்தில் ஏன் தாக்கல் செய்யவில்லை என்றால், மேற்படி வழக்கு சம்பவம் சம்மந்தப்பட்ட புட்டேஜை புகார்தாரர், அவரது கைப்பேசியில் இருந்த புட்டேஜை என்னிடம் காண்பித்த நிலையில், அது சம்மந்தமாக விசாரணை செய்து, பென்டிரைவிலும், குறுந்தட்டிலும் காப்பி செய்து, 65–பி சான்றிதழ் தயார் செய்வது சம்மந்தமாக அவரிடம் அந்த கைப்பேசியை நான் கேட்டபோது, அவர் மேற்படி கைப்பேசி அந்த சமயத்தில் அவரது குடும்ப உபயோகத்திற்கு தேவைப்படுவதால் பின்னிட்டு தருவதாக என்னிடம் சொல்லியிருந்த நிலையில், நான் பின்னிட்டு அவரிடம் மேற்படி கைப்பேசியை கேட்டபோது, அவர் கைப்பேசியை தர மறுத்துவிட்டார். மேலும், மேற்படி கைப்பேசியில், மேற்படி புட்டேஜ் அழிந்துவிட்டதாக சொன்னதால், என்னால் புகார்தாரரிடமிருந்து மேற்படி புட்டேஜ் சம்மந்தப்பட்ட கைப்பேசியை கைப்பற்றி அது சம்மந்தமாக விசாரணை மேற்கொள்ள இயலவில்லை. அதனால், மேற்படி கைப்பேசியை சமூகம் நீதிமன்றத்தில் என்னால் சமர்ப்பிக்க இயலவில்லை.

**நீதிமன்ற அனுமதியின் பேரில் எதிரி தரப்பில் மறுகுறுக்கு விசாரணை**

நான், எனது மறுவிசாரணையில் கூறியுள்ளவாறு சம்பவங்கள் எதுவும் நடக்கவேயில்லை என்றாலும், உண்மையிலேயே அவ்வாறு நடந்திருந்தால், அதனை எனது முந்தைய விசாரணையிலேயே குறிப்பிட்டிருப்பேன் என்றாலும் சரியல்ல.